# இந்து சமய அறநிலையத் துறை

## மானியக் கோரிக்கை எண். 47

## அறிவிப்புகள்
## 2016 – 2017

**சேவூர் S. இராமச்சந்திரன்**
இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்

# இந்து சமய அறநிலையத் துறை

# அறிவிப்புகள் 2016 – 2017

## 1. திருக்கோயில் மேம்பாட்டுப்பணிகள்

சென்னை, தண்டையார்பேட்டை அருள்மிகு முருகன் திருக்கோயில் மற்றும் தண்டையார் பேட்டை அருள்மிகு அகஸ்தீஸ்வரர் மற்றும் சேனியம்மன் திருக்கோயில்களுக்கு முறையே ரூ. 29 இலட்சம் மற்றும் ரூ. 30 இலட்சம் மதிப்பீட்டில் துறை நிதியிலிருந்து திருப்பணிகள் மேற்கொண்டு, இரு திருக்கோயில்களுக்கும் தலா ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டில் மின் ஆக்கி (Generator) அமைக்க **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## 2. பழனி பக்தர்களுக்கு பஞ்சாமிர்த பிரசாதம்

பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்கு இறையருள் பெற நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை புரிகின்றனர். இவ்வாறு இறையருள் பெற்று திரும்பும் பக்தர்களுக்கு பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்கே உரித்தான உலகப் பிரசித்தி பெற்ற பஞ்சாமிர்த பிரசாதம் வழங்க உத்தேசித்து, இப்பிரசாதம் ஒரு நபருக்கு தொன்னையில் 20 கிராம் என்ற அளவில் நாள்தோறும் மாலை சாயரட்சை பூஜை வழிபாடு முடிந்த பின்னர் 2000 பக்தர்களுக்கு திருக்கோயில் நிதியிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ. 15 இலட்சம் செலவில் வழங்க **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 3. திருக்கோயில் மராமத்து திருப்பணிகள்

திருவண்ணாமலை மாவட்டம், ஏரிக்குப்பம் அருள்மிகு சனீஸ்வர பகவான் திருக்கோயிலில் புதியதாக பிரகார மண்டபம் ரூ. 35.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டவும், ஆரணி அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலில் ரூ. 14 இலட்சம் மதிப்பீட்டில் பிரகார மண்டப புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளவும், புதுக்கோட்டை மாவட்டம், நார்த்தாமலை அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் நார்த்தாமலை அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோயிலில் ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டிலும் திருக்கோயில் மராமத்து திருப்பணிகள் மேற்கொள்ளவும், திருவண்ணாமலை மாவட்டம், பைங்கினூர் அருள்மிகு ஆதிபராசக்தி திருக்கோயிலில் கட்டப்பட்டு வரும் திருமண

மண்டபத்திற்கு மிகுதிப்பணிகள் ரூ. **16.70** இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் ரூ.**1.164** கோடி செலவில் திருக்கோயில் நிதி மற்றும் துறை நிதியிலிருந்து மேற்கொள்ள **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 4. பேருந்து நிலையம்

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக தற்காலிக பேருந்து நிலையம் திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 5. முடி காணிக்கை

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், மேட்டுப்பாளையம் அருள்மிகு நாட்டராயசுவாமி திருக்கோயிலில் முடி காணிக்கை செலுத்தும் பக்தர்களுக்கு ரூ.18.20 இலட்சம் மதிப்பீட்டிலும், காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், திருமலைவையாவூர் அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் திருக்கோயிலில் முடி காணிக்கை செலுத்தும் பக்தர்களுக்கு ரூ.14 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக இரண்டு திருக்கோயில்களில் ரூ.32.20 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதி மற்றும் துறை நிதியிலிருந்து புதிய முடி காணிக்கை மண்டபங்கள் கட்ட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 6. பூஜை சாமான்கள் விற்பனை செய்யும் கடைகள், வணிகக் கட்டடங்கள்

சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், கஞ்சமலை, அருள்மிகு சித்தேஸ்வரசுவாமி திருக்கோயிலில் ரூ.16.80 இலட்சத்திலும், மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான காலியிடத்தில் ரூ.21 இலட்சத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமான திருமண மண்டப வளாகத்தில் ரூ.23.50 இலட்சத்திலும் ஆக மூன்று திருக்கோயில்களில் பூஜை சாமான்கள் விற்பனை செய்யும் கடைகள், வணிகக் கட்டடங்கள் திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.61.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 7. யானை கொட்டகை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் உள்ள யானை பராமரிப்பிற்கென அதன் உபகோயிலுக்கு சொந்தமான இடத்தில் யானை கொட்டகை திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 8. பஞ்சாமிர்த கிடங்குகள்

திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் பஞ்சாமிர்தம் தயார் செய்யும் வளாகத்தின் மேற்கு பக்கம் இரண்டு கிடங்குகள் திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 9. புதியதாக சுற்றுச் சுவர்கள்

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான காலி இடங்களை சுற்றி இரண்டு சுற்றுச்சுவர்கள் ரூ.43 இலட்சத்திலும், மேலூர் வட்டம், அழகர்கோயில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் தெற்கு கோட்டை வாசல் முன்பு அமைந்துள்ள அம்பு போடும் மண்டபத்திலிருந்து ஆராவமுது கண்மாய் உள்ளடக்கி 505 மீட்டர் நீளத்திற்கு ரூ.37.50 இலட்சத்திலும் ஆக இரண்டு திருக்கோயில்களில் ரூ.80.50 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக மூன்று சுற்றுச் சுவர்கள் திருக்கோயில் நிதியிலிருந்து கட்ட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 10. பணியாளர் குடியிருப்பு

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் யானைப்பாகருக்கு உபகோயில் வளாகத்தில் ரூ.20 இலட்சத்திலும், நாகப்பட்டினம் மாவட்டம், திருக்கடையூர் அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோயிலில் திருக்கோயில் கண்காணிப்பாளருக்கு ரூ.21 இலட்சத்திலும் ஆக இரண்டு பணியாளர் குடியிருப்புகள் ரூ.41 இலட்சம் மதிப்பீட்டில் அந்தந்த திருக்கோயில் நிதியிலிருந்து கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 11. திருக்குளங்கள் புனரமைப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு

திருவாரூர் மாவட்டம், அருள்மிகு கோணேஸ்வர சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான குளத்தினை ரூ.13.10 இலட்சத்திலும், வேலூர் மாவட்டம், ரங்காபுரம் அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயில் குளத்தினை ரூ.7.40 இலட்சத்திலும், திருவாலி கிராமம், அருள்மிகு லட்சுமி நரசிங்க பெருமாள் திருக்கோயிலுக்கு சொந்தமான குளத்தினை ரூ.7.70 இலட்சத்திலும் ஆக மொத்தம் ரூ.28.20 இலட்சம் மதிப்பீட்டில் திருக்குளங்களை திருக்கோயில் நிதி மற்றும் துறை நிதி மூலம் மழைநீர் சேகரிப்பு வசதி செய்து செப்பனிட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 12. புதிய நவீன கழிவறைகள் மற்றும் குளியலறைகள்

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.44 இலட்சத்திலும், செட்டியாப்பத்து அருள்மிகு சுவாமி சிதம்பரேஸ்வரர் வகையறா திருக்கோயிலில் ரூ.28 இலட்சத்திலும், சிவகங்கை மாவட்டம், அரியாக்குறிச்சி அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ரூ.29 இலட்சத்திலும், கோவை மாவட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்திரகாளியம்மன் திருக்கோயிலில் ரூ.32.70 இலட்சத்திலும், திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி விடுதி அறைகளுக்கு ரூ.12.30 இலட்சத்திலும் ஆக 4 திருக்கோயில்கள் மற்றும் ஒரு கல்லூரியில் ரூ.1.46 கோடி மதிப்பீட்டில் திருக்கோயில் நிதி மற்றும் கல்லூரி மேம்பாட்டு

நிதியிலிருந்து ஆண்கள் மற்றும் பெண்களுக்கு புதிய நவீன கழிவறைகள் மற்றும் குளியலறைகள் கட்ட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 13. வாகன பாதுகாப்பு அறை

கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம், தோவாளை அருள்மிகு கிருஷ்ணசுவாமி திருக்கோயிலில் ரூ.12.60 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து புதியதாக வாகன பாதுகாப்பு அறை கட்ட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 14. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

சிவகங்கை மாவட்டம், அரியாக்குறிச்சி, அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயிலில் ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 15. புதியதாக திருத்தேர் கொட்டகைகள்

சென்னை, திருவொற்றியூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலில் ரூ.20 இலட்சத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், சங்கேந்தி, அருள்மிகு ஹரிஹரபுத்திர சுவாமி வகையறா திருக்கோயிலில் ரூ.3 இலட்சத்திலும் கரியமாணிக்கம், அருள்மிகு அய்யனார் பிடாரி வகையறா திருக்கோயிலில் ரூ.3.40 இலட்சத்திலும், அரியலூர் மாவட்டம், அரியலூர் அருள்மிகு கோதண்டராமசுவாமி திருக்கோயிலில் ரூ.2.60 இலட்சத்திலும் ஆக நான்கு திருக்கோயில்களில் ரூ.29 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து புதியதாக திருத்தேர் கொட்டகைகள் அமைக்க **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 16. திருக்கோயில்களில் நந்தவனங்கள் அமைத்தல்

திருக்கோயில்களில் உள்ள நந்தவனங்களில் இறைவழிபாட்டிற்கு உகந்த தெய்வீக மணம் கமழும் மலர்கள் பூக்கும் செடிகள் மற்றும் மரங்கள் பராமரிக்கப்பட்டு அவற்றிலிருந்து பெறப்படும் மலர்கள் மாலையாக தொடுக்கப்பட்டு திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் இறைவன் மற்றும் இறைவியர் திருவுருவங்களுக்கு மலர் சாற்றுதல் பண்டைக் காலம் தொட்டே வழக்கத்தில் உள்ளது. பெரும்பாலான திருக்கோயில்களில் தற்போது நந்தவனம் அமைத்து பராமரிக்கும் நிலை குறைந்துவிட்டது. எனவே இடவசதியுள்ள 51 திருக்கோயில்களில் ரூ.2.55 கோடி மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து புதிய நந்தவனங்கள் அமைக்கவும், மேலும் திருக்கோயில்களில்

ஏற்கனவே உள்ள நந்தவனங்களை சீரமைத்து புத்தாக்கம் செய்யவும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**சேவூர் S. இராமச்சந்திரன்**
இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்